செ.வெ.எண்: 34 நாள்:17.10.2016

## பத்திரிகைச்செய்தி

புதுக்கோட்டை மாவட்ட அரசு தோட்டக்கலைப்பண்ணைகளில் பழச்செடிகள், தென்னை நாற்றுக்கள் விற்பனைக்குத் தயார் நிலையிலுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியான்மலை, வல்லத்திராக்கோட்டை, நாட்டுமங்கலம் ஆகிய கிராமங்களில் அரசு தோட்டக்கலைப்பண்ணைகள் தோட்டக்கலைத்துறை மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

இந்தப்பண்ணைகளில் நல்ல தரமான நெட்டை இரக தென்னை நாற்றுக்கள் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது. தென்னை நாற்றுக்கள் நல்ல செழிப்பான நிலையிலுள்ளது. எனவே தென்னை நெற்றுக்கள் தேவைப்படும் விவசாயிகள் அரசு தோட்டக்கலைப்பண்ணைகளுக்கு சென்று பட்டியல் இட்டு பெற்றுக்கொள்ளலாம்.

இது தவிர தரமான மா ஒட்டுச்செடிகள், கொய்யாப்பதியன்கள், சப்போட்டா ஒட்டுச்செடிகள், மல்லிகைப்பதியன், நெல்லி ஒட்டுச்செடிகள் போன்ற ஒட்டு பழச்செடிகள் விற்பனைக்கு தயார் நிலையிலுள்ளது.

மேலும் , குழித்தட்டில் உற்பத்திச்செய்யப்பட்ட வீரிய ஒட்டு மிளகாய் நாற்றுக்கள் (சியாரா இரகம்) மெக்ஸிமா எல்லோ என்ற உயர் இரக செண்டிப்பூ நாற்று, பப்பாளி சின்டா இரகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வீரிய ஒட்டு பப்பாளி நாற்று போன்ற உயர் விளைச்சல் தரக்கூடிய நாற்றுக்கள் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளன. தேவைப்படும் விவசாயிகள் அரசு தோட்டக்கலைப்பண்ணைகளுக்கு சென்று பட்டியல் இட்டு பெற்றுக்கொள்ளலாம். இது தவிர கருவேப்பிலை, தேக்கு, வேம்பு, புளி, புங்கன் மற்றும் இதர அழகுச்செடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. விவசாயிகள் அரசு நிர்ணயித்த விலையில் பண்ணைகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

புதுக்கோட்டை மாவட்ட அனைத்து விவசாயப்பெருமக்களும் நமது மாவட்டத்திலுள்ள அரசு தோட்டக்கலைப்பண்ணைகளிலிருந்து குழித்தட்டு மிளகாய் வீரிய ஒட்டு சியாராஇரகம், தென்னை நெற்று, பழச்செடிகள் போன்ற செடிகளை அரசு நிர்ணயித்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் திரு.எஸ்.அருணாச்சலம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**